பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 04 2025 **TUESDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. இரண்டு நாள் அரசுமுறைப்பயணமாக சவுதி அரேபியா சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

2. ஜம்மு காஷ்மீரில் சுற்றுலா பயணிகள் மீது நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலையடுத்து, பாதுகாப்பு அதிகாரிகள் உடனான அவசர கூட்டத்திற்கு உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அழைப்பு விடுத்துள்ளார்.

3. ஏழ்மை நிலையில் உள்ள இஸ்லாமிய மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில் வக்ஃப் திருத்தச்சட்டம் உள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

4. இந்தியா – அமெரிக்கா நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வர்த்தக உறவுகளை சார்ந்துள்ளது என்று அமெரிக்க துணை அதிபர் திரு **J D Vance** தெரிவித்துள்ளார்.

5. கடும் வெப்ப அலையிலிருந்து தொழிலாளர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு, மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இரண்டு நாள் அரசுமுறைப்பயணமாக இன்று சவுதி அரேபியா தலைநகர் ஜெட்டா சென்றடைந்தார்.

அங்கு, அவருக்கு 21 துப்பாக்கி குண்டுகள் முழங்க சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இருநாடுகளுக்கும் இடையேயான நட்புறவு மேலும் வலுவடையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு பட்டத்து இளவரசரும், பிரதமருமான திரு. **Mohammed Bin Salman** அழைப்பின்பேரில் மூன்றாவது முறையாக திரு நரேந்திர மோடி சவுதி அரேபியாவுக்கு சென்றுள்ளார்.

<<<<<<<>>>>>>>

ஜம்மு காஷ்மீரில் சுற்றுலா பயணிகள் மீது நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலையடுத்து, பாதுகாப்பு அதிகாரிகள் உடனான அவசர கூட்டத்திற்கு உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அழைப்பு விடுத்துள்ளார்.

அனந்த்நாக் மாவட்டத்தின் பஹல்காம் பகுதியில் நடத்தப்பட்ட இந்த தாக்குதல் சம்பவம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடியிடம் காணொலி வாயிலாக உள்துறை அமைச்சர் எடுத்துரைத்தார்.

இதனையடுத்து, சம்பவ இடத்தில் நேரில் சென்று பாதுகாப்பு சூழல் குறித்து ஆய்வு செய்யுமாறு பிரதமர் அறிவுறுத்தினார்.

இந்த சம்பவத்திற்கு ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் சுற்றுலா பயணிகள் பலர் காயமடைந்துள்ளதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<<>>>>>>>

அணுசக்தித்துறையில் முதலீடு செய்வதற்கான ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், நாட்டில் ஆராய்ச்சிப்பணிகளில் கல்வி நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சாமானிய மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில், ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பின்தங்கியுள்ள துறைகளில் ஆய்வுப்பணிகளை மேற்கொள்வது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

ஏழ்மை நிலையில் உள்ள இஸ்லாமிய மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில் வக்ஃப் திருத்தச்சட்டம் உள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்கும் வகையிலும், ஏழை மக்களுக்கு பயன் அளிக்கும் வகையிலும் இரண்டு முக்கிய அம்சங்கள் இச்சட்டத்தில் இடம்பெற்றுள்ளதாக கூறினார்.

இந்தியா போன்ற மிகப்பெரிய நாட்டில் நிலங்கள் முறையாக பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இச்சட்டத்தின்மூலம், எந்தவொரு கிராமத்தையும் வக்ஃப் சொத்தாக தன்னிச்சையாக அறிவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அனைத்து வக்ஃப் சொத்துக்களையும் அதற்கான பிரத்யேக இணையதளத்தில் முறையாக பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப்பணி தேர்வுகளுக்கான இறுதி முடிவுகள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் 725 ஆண்கள், 284 பெண்கள் என மொத்தம் ஆயிரத்து ஒன்பது பேர் குடிமைப்பணி அதிகாரிகளாக நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இத்தேர்வில் வெற்றிபெற்றுள்ள முதல் 25 இடங்களில், 11 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தை சேர்ந்த சிவசந்திரன், இத்தேர்வில் அகில இந்திய அளவில் 23-ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

தமிழக அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ள மாணவர் சிவசந்திரனுக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், மாநில அரசின் பயிற்சித் திட்டத்தில் சேர்ந்து பயனடைந்துள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

லட்சக்கணக்கான மாணவர்களின் திறன்களை மேம்படுத்த இத்திட்டம் வகை செய்யும் என்று திரு மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சென்னையை சேர்ந்த மாணவி மோனிகா, அகில இந்திய தரவரிசையில் 39-ஆவது இடத்தை பிடித்துள்ளது தமக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

இந்தியா – அமெரிக்கா நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வர்த்தக உறவுகளை சார்ந்துள்ளது என்று அமெரிக்க துணை அதிபர் திரு **J D Vance** தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் நடைபெற்ற வர்த்தக உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தக நடைமுறைகள் இறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்பின் வர்த்தக கொள்கை, பல்வேறு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக நடவடிக்கைகளில் சமநிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கை என்று அவர் கூறினார்.

பாதுகாப்புத்துறையில் அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடாக இந்தியா உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

உலகத்தரம் வாய்ந்த பாதுகாப்பு சாதனங்களை இந்தியாவிற்கு வழங்க அமெரிக்கா தயாராக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

எரிசக்தித்துறையில் இருநாடுகளும் இணைந்து செயல்பட ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக அவர் கூறினார்.

மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இருநாடுகளும் கவனம் செலுத்தி வருவதாக திரு **J D Vance** தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

கடும் வெப்ப அலையிலிருந்து தொழிலாளர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு, மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, இதுதொடர்பாக அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச தலைமைச்செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்கருதி, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடும் வெப்பம் நிலவும் சமயங்களில் பணிபுரியும் நேரத்தை மாற்றியமைப்பது, போதிய குடிநீர் வசதியை ஏற்படுத்துவது, மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அக்கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

ஜவுளி உற்பத்தியில் மூங்கில் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் நடைபெற்ற வன ஆராய்ச்சி நிறுவன கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், சுயசார்பு இந்தியா மற்றும் பசுமை பொருளாதாரம் என்ற இலக்கை எட்டுவதில் ஜவுளி உற்பத்தி முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

மூங்கில் உற்பத்தியை அதிகரிப்பதன்மூலம், ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்றும் திரு கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் கட்டார், இரண்டு நாள் அரசுமுறைப்பயணமாக நேபாளம் சென்றுள்ளார்.

காட்மாண்டு விமான நிலையத்தில் அவருக்கு அந்நாட்டு எரிசக்தித்துறை அமைச்சர் திரு சுரேஷ் ஆச்சாரியா, அந்நாட்டிற்கான இந்திய தூதர் திரு நவீன் ஸ்ரீவஸ்தவா மற்றும் துறைசார்ந்த உயரதிகாரிகள் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

அவரது இந்த பயணத்தின்போது பரஸ்பரம் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும், பல்வேறு மின் திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

கத்தோலிக்க திருச்சபையின் தலைமை மதகுருவான போப் பிரான்சிஸின் இறுதிச்சடங்கு வரும் சனிக்கிழமை நடைபெறும் என்று வாட்டிகன் திருச்சபை அறிவித்துள்ளது.

கத்தோலிக்க திருச்சபையின் கார்டினல்கள் கூட்டத்தில், இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்னாரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் நாளை வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் 'Damoh மாவட்டத்தில் பயணியர் வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த பள்ளத்தில் விழுந்து ஏற்பட்ட விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐந்து பெண்கள் மற்றும் 3 குழந்தைகள் உட்பட எட்டு பேர் உயிரிழந்துள்ளனர். ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<<<>>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Ankur Bhattacharjee** வெற்றிபெற்றுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் அவர், 7-11, 11-6, 13-11, 11-7 என்ற செட் கணக்கில், சீனாவின் **Yang Sun** –ஐ வென்றார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

லக்னோவில் நடைபெறவுள்ள இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

<<<<<<<>>>>>>>